சம்மாந்துறை பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 201 யூலை 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 23 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஒக்தோபர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து சம்மாந்துறை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பிரதேச சபையின் கீழ் இயங்கும் நான்கு நூல் நிலையங்களுக்கும் மீளாய்வாண்டில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 635 புத்தகங்களின் பெறுமதியும் அம்பாறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் மற்றும் தனிநபர்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 318 புத்தகங்களின் பெறுமதியாகிய ரூபா.105,921 தொகையும் சொத்துக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா.354,085 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பின் பெறுமதி சொத்துக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக காரைதீவுப் பிரதேச சபைக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா.366,444 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக காரைதீவுப் பிரதேச சபைக்கு மீளாய்வாண்டின் யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்காக செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா.572,145 தொகை சொத்துக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2005 ஆம் ஆண்டில் காணமால் போன ரூபா.95,670 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் இருப்பு மீதியாக காட்டப்பட்டு வருகின்றது.

(ஊ) பேரேட்டின் படி மீளாய்வாண்டிற்காக அறவிடப்படவேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா.628,406 தொகையாக இருந்தபோதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா.1,522,990 தொகையாக காட்டப்பட்டதனால் அறவிடப்படவேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா. 894,584 தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டில் பிரதேச சபைக் கட்டிடம் மற்றும் கொல்களக் கட்டிடம் கொடுப்பனவின்போது கழிக்கப்பட்ட பிடிகாசு முறையே ரூபா.96,317 மற்றும் ரூபா.1,503,268 தொகைகள் செலுத்தவேண்டிய நிலுவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.4 தொங்கல் கணக்கு

2005 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக தொங்கல் கணக்கில் செலவு மீதியாக ரூபா.6,210 காட்டப்பட்டு வருகின்ற போதிலும், அதனை இனங்கண்டு அக்கணக்கினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவிடவேண்டிய இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா.11,921,435 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தைக் கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ரூபா.1,813,278 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

1.3.6 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| காணி மற்றும் கட்டடிடங்கள் | 99,403,943 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் காணி உரிமைப்பத்திரங்கள் |
| தீர்க்கப்படாத முற்பணங்கள் | 784,618 | முற்பண பதிவேடு |
| கடன்கொடுத்தோர் | 3,295,607 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் |
| இறைச்சிக்கடை குத்தகை நிலுவை | 14,176,939 | குத்தகைப் பதிவேடுகள் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா. 783,743 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.17,964,998 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.10,779,861 பின்னாடைவைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், அறவீடு செய்யப்பட்ட வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வீத வரிகள் | 4,000,000 | 15,425,489 | 2,164,124 | 54 |
| குத்தகைகள் | 13,800,000 | 10,698,337 | 3,101,663 | 22 |
| வாகன வரி | 15,000 | 12 | 14,988 | 100 |
| திண்மக்கழிவ சேவைக் கட்டணம் | 2,500,000 | 384,069 | 2,115,931 | 85 |
| முத்திரை கட்டணம் | 24,821,402 | 9,017,058 | 15,804,344 | 64 |

#### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டிய ரூபா.7,922,708 கூட்டு மொத்தமான வீதவரிகளில் 11% ஆன ரூபா.872,688 தொகையான வீதவரிகளே மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டி ருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஆதனவரி சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா.3,887,719 தொகையில் 13% ஆன ரூபா.505,403 தொகையே அறவிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 உத்தரவுப் பத்திரக்கட்டணம்

2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு இறுதிவரைக்கும் அறவிடப்படவேண்டிய உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா 142,669 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 இன் (vii)(8) மற்றும் (xxx) ஆம் உப பிரிவுகள் மற்றும் 1644 ஆம் இலக்க 2010 மார்ச் 05 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 13 விளம்பரப் பலகைகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா.158,020 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவிடு

2010 மார்ச் 05 ஆம் திகதிய 1644 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவப்பட்ட 03 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா.168,000 தொகையான உரிமைக்கட்டணத்தை 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்திலிருந்து 2014 திசெம்பர் 31 இல் கிடைக்கவேண்டிய ரூபா.296,082 தொகையினை கணிப்பீடு செய்து மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.1,903,023 தொகையினை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

(அ) சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொல்களத்திற்கு புதிய குடிநீர் இணைப்பை வழங்குவதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் சமார்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் காணப்பட்ட சில கணிப்பீட்டுத் தவறின் காரணமாக ரூபா.415,908 தொகைக்குப் பதிலாக ரூபா.474,093 தொகையான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டது. எனவே இத்தவறை கவனத்தில் கொள்ளாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா.58,185 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததது.

(ஆ) 2013 ஆம் ஆண்டு இறுதிவரை வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி ரூபா.7,244,750 மொத்த தொகையில் ரூபா.5,659,975 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்காது மீளாய்வாண்டில் சபையின் வருமானக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை 2015 யூன் 06 ஆந் திகதி சமார்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 59 களஞ்சிய பொருட்களும், 595 நூலக புத்தகங்களும் பழுதடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 02 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் நிலுவையாகவுள்ள ரூபா.7,922,707 ஆதனவரியில் ரூபா.872,688 தொகையை அறவிட்டதற்காக நடுக்கட்டல் உத்தியோகத்தர்களுக்கு 12% தரகுப்பணமாக ரூபா.104,723 கொடுப்பனவு செய்யவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட்ட ஆதனவரி ரூபா.231,975 தொகைக்கும் சேர்த்து ரூபா.132,560 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக தரகுப்பணம் ரூபா.27,837 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் உள்ள 64 கடைகளின் நிர்மாணம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் அதிலுள்ள 06 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) புறநெகும (நெல்சிப்) திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா.15,013,071 செலவில் சம்மாந்துறையில் நிர்மாணிக்கப்பட்ட கொல்களமானது அறுக்கப்படும் மிருகங்களின் கழிவுகளை அகற்றுவதற்காக ஏற்பாடுகளைச் செய்யத்தவறியதன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 02 திகதி வரை பயன்படுத்த முடியாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமான முகாமைத்துவம்